ॐ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம :

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

## வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்

(பதிவு எண்: 226 / 1992)




சத்திரப்பட்டி சாலை,
வேதபுரீ, தேனி. - 625 531



ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# உள்ளம் தோறும் வள்ளுவம்

## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்
## ஸனாதன நெறியில் வள்ளுவம்




## அறத்துப்பால்

# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்



நாள் :
23, ஐப்பசி 2025

Date:
09, November 2025

www.vedaneri.org

வகுப்பு 12

அதிகாரம் : 6

# இல்லறவியல்

## க்ருஹஸ்த ஆச்ரம தர்மம்

## வாழ்க்கைத் துணைநலம்

# வாழ்க்கைத் துணைநலம்

## இல்லாளின் சிறப்புகள், சிறப்பான இல்லாளால் ஏற்படும் நன்மைகள்.

### குறள்: 1

இல்லாளின் சிறப்பு

### குறள்கள் 2 & 3

இல்வாழ்க்கையின் சிறப்புக்குக் காரணம்

(வாழ்க்கைத் துணையின் மாண்பு)

### குறள்: 4

கற்பு நலத்தின் சிறப்பு

### குறள்: 5

கற்பு நலத்தின் ஆற்றல்

குறள்: 6

நல்ல வாழ்க்கைத் துணையின் இலக்கணம்

குறள்: 7

சுய ஒழுக்கத்தின் சிறப்பு

குறள்: 8

பயன் - தெய்வமாகத் தொழுபவள் தொழப்படுவாள்.

குறள்: 9

பயனின்மை - கற்புடைய மனைவி இல்லாதவர்க்கு ஏற்படும் குற்றம்

குறள்: 10

இம்மைப் பயன் - நன்மக்களைப் பெறுதல்

# 1. மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

மனைவாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்புகள், நற்செயல்கள் இருப்பவளாகி, தன்னைக் கொண்ட கணவனது வருமானத்துக்கு ஏற்றவாறு வாழ்க்கை நடத்தத் தெரிந்த பெண் இல்வாழ்க்கைக்குத் தக்க துணையாவாள்.

**நற்குணங்கள்:** ப்ரஹ்மசாரி முதலான மூவருக்கும் துறந்தார் முதலான மூவருக்கும் தென்புலத்தார் முதலான நால்வருக்கும் துணையாயிருக்கத் தேவையான அன்புடைமை முதலானவை.

**நற்செயல்கள்:** நல்வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை சேர்த்து வைத்தல், சுவையான உணவு சமைக்கத் தெரிதல், வீட்டுவேலைகள், உலக நடையறிந்து ஒழுகுதல் போன்றவை.

**வருவாய்க்குத்தக்க வாழ்க்கை:** கணவனது வருமானத்துக்குள் கடனில்லாமல் சிக்கனமாகக் குடும்பம் நடத்தும் பாங்கு.

## 2. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை எனைமாட்சித் தாயினும் இல்.

இல்வாழ்க்கைக்குரிய நற்குணங்கள் நற்செய்கைகள் (ஒருவனின்) மனைவியினிடத்தில் இல்லாவிட்டால் (அவனுடைய) குடும்ப வாழ்க்கை (செல்வத்தால்) எவ்வளவு பெருமையுடையதாக இருந்தாலும் அப்பெருமையினால் பயன் இல்லை.

குடும்ப வாழ்க்கையின் பயன் மனதில் மகிழ்ச்சி பெறுதல். நல்ல மனைவி இல்லையென்றால் மனமகிழ்ச்சி இருக்காது. செல்வத்தால் வரும் இன்பம் உடலின்பம் மட்டுமே.





## 3. இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென் இல்லவள் மாணாக் கடை.

(ஒருவனுக்கு) மனைவியானவள் இல்லற மாண்புகளை உடையவளாக இருந்தால் இல்லாதது எது? அம்மனைவியானவள் அம்மாண்புகள் இல்லாதவளாக இருந்தால் இருப்பது யாது?

மாண்புகள் - நற்குண, நற்செயல்கள்.

மனைவி நற்குணங்கள் உடையவளாக இருந்தால் என்ன செல்வம் இல்லை என்றாலும் ஒருவனது வாழ்க்கையில் மனமகிழ்ச்சி இருக்கும். இல்லை என்றால் எவ்வளவு செல்வம் இருந்தாலும் மனதில் மகிழ்ச்சி, நிறைவு இருக்காது.

இவ்விரண்டு பாட்டாலும் இல்வாழ்க்கைக்கு வேண்டுவது மனைவியின் நற்குண, நற்செயல்களே மற்றவையல்ல என்பது சொல்லப்பட்டது.

## 4. பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
## திண்மையுண் டாகப் பெறின்.

மனைவியிடத்தில் உறுதியான கற்புநெறி இருந்தால் அப்படிப்பட்ட வாழ்க்கைத் துணையைப் பெற்றதை விட பெருமைபடத்தக்கது ஒருவனுக்கு என்ன உள்ளது?

கற்பு - அறநூல்களும் சான்றோர்களும் கற்பித்த ஒழுக்கநெறியைக் கற்பித்துக் கொள்வது கற்பு.

இல்வாழ்க்கையின் நோக்கம் இன்பமும் அறச்செயல்களைச் செய்து புண்ணியம் ஈட்டுவதும். கற்பெனும் ஒழுக்கம் உடையவளாக மனைவி இருந்தால்தான் இவ்விரண்டும் நடக்கும். ஆகவே, கற்புடைய மனைவியை விட மேம்பட்டது இல்லை.

(மனைவியை திருப்தியாக வைத்துக் கொள்வது கணவனின் கடமையாகிறது.)

# 5. தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை.

மற்ற தெய்வங்களை விட மேலான தெய்வமாகக் கருதி தன் கணவனையே வணங்கி வழிபட்டு நடக்கும் மனைவி பெய்யென்று சொன்னால் மழையும் பெய்யும்.

கற்புடைய பெண்ணின் வாக்குக்கு தெய்வமும் கட்டுப்படும் என்று கற்பின் வல்லமை கூறப்பட்டது.

(கற்புடைய மனைவியின் சொல் பிழைபடுவதில்லை. கற்புடைய மனைவியிருந்தால் வாழ்க்கையில் எல்லா வளங்களும் உடைய நிறைவு இருக்கும்.)



## 6. தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்துக் சோர்விலாள் பெண்.

கற்புநெறி தவறாமல் தன்னைக் காத்துக் கொண்டு, தன்னை மனைவியாகக் கொண்ட கணவனையும் (நல்ல உணவு முதலான உபசாரங்களால்) பாதுகாத்து, குடும்பத்துக்கு அவப்பெயர் வராமல் புகழையும் காப்பாற்றி இல்லறநெறியில் உறுதியுடையவளாக இருப்பவளே நல்ல வாழ்க்கைத் துணையாவாள்.

தகைசான்ற சொல் = புகழ் - நல்ல குடும்பம் எனும் பெயர்.
கற்புநெறியால் ஒரு பெண்ணுக்கு ஸமுகத்தில் கிடைக்கும் நல்ல குடும்பத்தலைவி எனும் நன்மதிப்பு.
சோர்வு = மறதி. சோர்விலாள் = மறவாத உறுதியுடையவள்.



# 7. சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
# நிறைகாக்கும் காப்பே தலை.

பெண்ணினைப் புறக்கட்டுப்பாடுகளால் காக்கும் காவலானது என்ன பயனைக் கொடுக்கும்? அப்பெண்ணே தன் கற்புநெறியை (அதன் சிறப்பறிந்து) காத்துக் கொள்வதே முதன்மையானது.



சிறை - சுதந்திரமாகச் செயல்பட முடியாத கட்டுப்பாடு.

காப்பு - காவல்

நிறை - மனதைக் கற்பின் வழியே நிறுத்துதல்.

தலை - தலையானது - முதன்மையானது - முக்யமானது.

நிறையெனப் படுவது காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம் - நக்கீரர்

ஒன்றின் சிறப்பறிந்து தான் விரும்பி ஒழுகுவதே ஒழுக்கம். அது மனதிலிருந்து வர வேண்டியது, ஸ்வதந்தரமானது. புறக்கட்டுப்பாடுகளால் வருவது செயற்கையானது. துன்பம் தருவது.

## 8. பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப் புத்தேளிர் வாழும் உலகு.

பெண்கள் (அன்பும் அறனும் கொண்டு) தம்மை மனைவியாக பெற்ற கணவரது (அறச்செயல்களுக்கு) துணையாக இருக்கப்பெற்றால் தேவர்கள் வாழும் உலகத்தில் போற்றப்படுவர்.

தம் கணவனைத் தெய்வமாக வணங்கும் பெண்கள் மறுமையில் தேவர்களால் வணங்கப்படுவர்.

மாதர்களுக்கு ஐம்பெரும் வேள்வி உபவாசம், விரதம் முதலியன சுதந்தரமாக இல்லை. கணவனுக்குப் பணிவிடை செய்வதனாலேயே ஸ்வர்க்கத்தில் பெருமை அடைகிறார்கள்.

– மனுதர்ம சாஸ்த்ரம்.



# 9. புகழ்புரிந்த இல்லோர்க்கு இல்லை இகழ்வார்முன் ஏறுபோல் பீடு நடை.

(கற்பொழுக்கத்தால்) புகழை விரும்பிய மனைவி இல்லாதவர்களுக்கு தம்மை இகழ்ந்து பேசும் பகைவர் முன்னால் ஆண்சிங்கம் போன்ற கம்பீரமான நடை இல்லாமல் போகும்.

தம்மைச் சார்ந்த பெண்களின் ஒழுக்கம், ஆண்களின் வீரத்திற்குத் துணையாக நிற்கும்.







## 10. மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
## நன்கலம் நன்மக்கட் பேறு.

மனைவியினது சிறப்பே (நற்குண நற்செயல்களே) ஒருவனுக்கு நன்மை என்று சொல்லுவர் அறிஞர். நல்ல குழந்தைகளைப் பெறுதல் அச்சிறப்புக்கு நல்ல அணிகலன் ஆகும் என்றும் சொல்லுவர்.

**மனைமாட்சி - மனைவியின் மாட்சிமைப்பட்ட குணங்கள்.**

ஒருவன் நன்மையைச் செய்ய நல்ல வாழ்க்கைத் துணையே சிறந்த துணையாகும். அதுவே அவனுக்கு மேலும் பல நன்மைகளை - சிறப்புக்களைக் - கொண்டு தரும். நல்ல வாழ்க்கைத் துணையோடு நல்ல குழந்தைகளைப் பெறுதல் அவன் வாழ்க்கையை மேலும் அழகானதாக - சிறப்பானதாக - ஆக்கும்.



ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்- தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(மாங்குடி மருதனார்)

1. Youtube Channels:

   [Swami Omkarananda]

   [Vedapuri Events]

   [Swami Purnananda Tamil]



2. Instagram - swami om karananda

3. Facebook - Swami omkarananda

4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam

5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam

94430 51910 www.vedaneri.org vedapuricamps@gmail.com